Register No. [ | | | | | | | ]

**FRC** **3959–18**

(For the candidates admitted from 2009-2010 to 2016-2017)

B.A.,B.L./B.A.LL.B. DEGREE EXAMINATIONS, NOVEMBER 2018.

(Five Years Regular Course)

Third Year – Fifth Semester

CONSTITUTIONAL LAW – I

Time : Three hours Maximum : 100 marks

PART A — (3 × 12 = 36 marks)

Answer THREE of the following not exceeding 6 pages each.

பின்வருவனவற்றுள் மூன்றிற்கு ஒவ்வொரு கேள்விக்கும் ஆறு பக்கங்களுக்கு மிகாமல் விடையளிக்கவும்.

1. 'Equality implies equality among equals and not among unequals'. Explain with decided cases.

   சமத்துவம் என்பது சமமானவர்களுக்கிடையில் தானே தவிர சமமான நிலையில் இல்லாதவர்களுக்கிடையில் இல்லை. முடிவு செய்யப்பட்ட வழக்குகளுடன் தெளிவுபடுத்துக.

https://www.tndaluonline.com

2. Bring out the meaning of the term 'other authorities' in Art. 12 citing decided cases.

முடிவுற்ற வழக்குகளை எடுத்துரைத்து உறுப்பு 12ல் கூறப்பட்டுள்ள இதர அதிகார அமைவுகள் என்பதின் பொருளை எடுத்துக்கூறவும்.

3. Preamble to the Constitution is a key to open the minds of the makers of the Constitution. Discuss.

அரசமைப்புச் சட்டத்தின் முகப்புரை அதை உருவாக்கியவர்களின் உள்ளத்தைத் திறக்கும் திறவுகோல் – விளக்குக.

4. What are the outstanding features of the Indian Constitution?

இந்திய அரசமைப்புச் சட்டத்தின் சிறப்பு இயல்புகள் என்ன?

5. Examine the scope of the right to life under the Indian Constitution.

இந்திய அரசமைப்புச் சட்டத்தின் கீழ் வாழும் உரிமையின் அளாவுகையை விளக்குக.



PART B — (8 × 6 = 48 marks)

6. Write short answers on EIGHT of the following not exceeding 2 pages each :

ஒவ்வொரு கேள்விக்கும் இரண்டு பக்கங்களுக்கு மிகாமல் பின்வருவனவற்றுள் எட்டிற்கு குறுகிய விடைகள் எழுதவும்.

(a) Protective discrimination.

பாதுகாப்பு வேற்றுமை காட்டல்.

(b) Doctrine of severability.

பிரிக்கதக்க கோட்பாடு.

(c) Self incrimination.

தன் குற்றப்படுத்துதல்.

(d) Ex post facto law.

முன் நடந்த செயல்களைப் பின் சட்டத்திற்குட்படுத்தல்

(e) Suspension of fundamental rights.

அடிப்படை உரிமை இடை நிறுத்தம்.

(f) Secularism.

மதசார்பின்மை.

(g) National Anthem Case.

நாட்டுப்பண் வழக்கு.

(h) Preventive detention.

தடுப்புக் காவல்.



https://www.tndaluonline.com

(i) Indra Sawney vs. Union of India.

இந்திரா சாவினி எதிர் இந்திய ஒன்றியம்.

(j) Termination of citizenship.

குடியுரிமையை முடிவுக்கு கொண்டு வருதல்.

PART C — (4 × 4 = 16 marks)

Answer FOUR of the following (not exceeding two pages each) by referring to relevant provisions of law and decided cases with cogent reasons.

பின்வருவனவற்றுள் நான்கிற்கு (ஒவ்வொரு கேள்விக்கும் இரண்டு பக்கங்களுக்கு மிகாமல்) சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

7. The request of 'A' who is under preventive detention to make his representation before the advisory board on preventive detention by a legal practitioner of his choice was rejected. 'A' contends that it is violative on his fundamental rights. Decide.

தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ள 'அ' என்பவர் தடுப்புக்காவல் அறிவுரை வாரியத்தின் முன் தான் விரும்பும் வழக்குரைஞரால் தனது தடுப்பு காவலுக்கு எதிரான முறைவேண்டுதலை எடுத்துரைக்க கோருகிறார். இக்கோரிக்கை மறுக்கப்பட்டபோது அது தனது அடிப்படை உரிமையை பாதிப்பதாக வாதிடுகிறார்- முடிவு செய்க.



8. A citizen who was in preventive detention under defence of India rules, wrote a book on science with the permission of government but he was denied permission to send the same out the prison for publication. Decide.

இந்திய பாதுகாப்பு விதிகளின் கீழ் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருந்த ஒரு இந்திய குடிஞர் அரசு அனுமதியோடு ஒரு அறிவியல் புத்தகம் எழுதினார். பின் அதை வெளியீடு செய்ய சிறைக்கு வெளியே அனுப்பிட அரசு அனுமதி மறுத்தது தீர்மானிக்க.

9. Children below 14 years of age were employed in a match factory. The employer of the factory gave meager wages to the child workers. The Government authorities found out and ordered closure of the factory. Is the Act of the Government valid. Decide.

தீக்குச்சித் தொழிற்சாலையில் 14 வயதிற்கு உட்பட்ட சிறுவர்கள் பணிக்கு அமர்த்தப்பட்டனர். தொழிற்சாலையின் உரிமையாளர்கள் மிகக் குறைந்த ஊதியமே வழங்கினர். இது அரசாங்க அதிகாரிகளுக்கு தெரிய வந்து தொழிற்சாலையை இழுத்து மூட உத்தரவிட்டனர். அரசின் இந்த நடவடிக்கை செல்லத்தக்கதா? தீர்மானிக்க.

10. Mr. Ravi his wife Selvi and his daughter Nirupa were citizens of India. In March 1948, Selvi and Nirupa left for Pakistan and stayed there for six months and there was no explanation for such a stay. However Mr. Ravi continued to live in India. Discuss whether Selvi and Nirupa would be considered as citizens of India.



https://www.tndaluonline.com

திரு. ரவி அவர் மனைவி செல்வி, மற்றும் அவருடைய மகள் நிருபா ஆகியோர் இந்திய குடிமக்களாக இருந்தனர். 1948 - ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் செல்வியும், நிருபாவும் பாகிஸ்தானுக்கு சென்று அங்கேயே ஆறு மாதங்களுக்கு மேலாக தங்கி இருந்தனர். இவ்விதம் தங்கியதற்கு எந்த விதமான விளக்கமும் தரப்படவில்லை. ஆனால் திரு. ரவி தொடர்ந்து இந்தியாவிலேயே தங்கியிருந்தார். செல்வியும், நிருபாவும் இந்தியாவின் குடிமக்களாக கருத முடியுமா என்பதை ஆராய்க.

11. A Non Brahmin was appointed by the Government in a famous temple as Pujari to perform pooja. This was challenged before the Supreme Court as he is not competent. Decide the constitutional validity of the appointment, with recent cases.

பிராமணர் அல்லாத ஒருவர் புகழ் பெற்ற திருக்கோயில் ஒன்றில் வழிபாடு நடத்திட பூஜாரியாக நியமிக்கப்பட்டார். அவர் தகுதி அற்றவர் என உச்சநீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. சமீபத்திய வழக்குகள் மூலம் இந்நியமனத்தின் செல்லும் தன்மையை தீர்மானிக்கவும்.

12. A State was divided into two states without the consent of the state, by the Central Government. The State filed a writ before the Supreme Court. Decide.

ஒரு மாநிலத்தை அம்மாநிலத்தின் இசைவின்றி இரண்டு மாநிலங்களாக மத்திய அரசு பிரித்தது. இதை எதிர்த்து அம்மாநிலம் உச்சநீதிமன்றத்தில் வழக்கு தொடர்கிறது – தீர்மானிக்க.

---



https://www.tndaluonline.com